Registered as a Newspaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-06

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி -08 | 20-02-2004 | வெள்ளிக்கிழமை | ஓசை-002

பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ எடிட்டிங்,
பாடல் பதிவுகள்
படம் பிறேம்செய்தல்,
அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.
R.V
பந்தல் சேவை,
தர்மபுரம்.

# எந்தவொரு கட்சிக்கும் வரும்தேர்தலில் அறுதிப்பெரும்பான்மை கிடைக்காது

## - ராய்ட்டர் நிறுவன ஆய்வில் தெரிவிப்பு

**எதிர்வரும் தேர்தலில் எந்தவோர் நாடாளுமன்ற கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காதென ராய்ட்டர் செய்தி நிறுவனம் நடத்திய ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.**

இதற்கமைய ஐக்கிய தேசியக் கட்சி 85 தொடக்கம் 115 ஆசனங்களைப் பெறலாம் எனவும், ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி 99 ஆசனங்களைப்பெறலாம் எனவும் கூறப்பட்டுள்ளது. இதற்கமைய ஐ.ம.சு.மு. சிறுபான்மை பலத்தைச் கொண்ட அரசாங்கத்தை மட்டுமே அமைக்க முடியும். தமிழ்த் தேசிக் கூட்டமைப்பு இத் தேர்தலில் 20 தொடர்க்கம் 25 ஆசனங்களைப் பெறலாமென கணிப்பிடப்பட்டுள்ளது அத்துடன் ஐ.தே.கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்து ஓர் ஆட்சியை மேற்கொள்ளலாமென்ற ஓர் நிலை தோன் றியுள்ளது. எனவே இலங்கையின் பாராளுமன்றமன்றம் என்றும் அறுதிப் பெரும்பான்மை அற்ற பாராளுமன்றமாகவே இருக்குமென ராய்ட்டர் மேலும் தெரிவித்துள்ளது.

இவ் ஆய்விற்கு வங்கி மற்றும் நிதிநிறுவனங்களைச் சேர்ந்த அமைப்புக்கள் உட்பட 12 நிறுவனங்கள் இந்த ஆய்விற்காக உட்படுத்தப்பட்டு அதன் கருத்துக்களுக்கு அமையவே மேற் கண்டவாறு கூறப்பட்டுள்ளது. (32)

## இந்திய மீனவர் குறித்து ஆராய இந்தியத் தூதரக அதிகாரிகள் இன்று யாழ். செல்கின்றனர்

சிறிலங்காவுக்கான இந்திய தூதரகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழு ஒன்று இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளது.

யாழ். சிறையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இந்திய மீனவர்களின் உடல் நிலை நாளாந்தம் மோசமடைந்து வருவதாக சிறைச்சாலை அத்தியட்சகரால் சிறிலங்காவுக்கான இந்திய தூதரகத்திற்கு நேற்று முன்தினம் கூறியதைத் தொடர்ந்து இவர்களின் உடல் நிலை தொடர்பாகவும், இவர்களை விடுவிப்பது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய இக்குழு வருகை தரவுள்ளது. மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக நீதிபதிகளுடனும் இவர்கள் கலந்துதாலோசிப்பர் எனக் கூறப்படுகிறது. (33)

## வடக்கு-கிழக்கில் தேர்தல் சாவடிகள் அமைக்கும் இடங்கள் குறித்து முடிவில்லை

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தேர்தல் நடத்துவதா அல்லது வெளியே தேர்தல் அடிப்படையில் பாதுகாப்பு காவலரண்களுக்கு அண்மையில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் தேர்தல் சாவடிகளை நிறுவுவதா என்பது குறித்துத்தான் இன்னும் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என சிறிலங்காத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்கா தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பத்திரிகையாளர் யாழ்ப்பாணம் குறிப்பாக விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதியில் எவ்வாறு தேர்தல் நடத்துவதென தேர்தல் திணைக்களம் தீர்மானித்துள்ளது போன்ற பாணியில் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இது தொடர்பாக தெரிவிக்கையில்; பாதுகாப்பு, முத்தரப்புத் தளபதிகளிடம் பேச்சு வார்த்தை நடத்தி இருப்பதாகவும் இது குறித்து முழு முடிவிற்குத் தான் வரவில்லை என்றும்,

தேர்தல்க்ள் நடைபெறுவதற்கு இன்னமும் ஆறு வாரங்கள் இருக்கின்றன. ஆகவே இது தொடர்பாக தேர்தலுக்கு அண்மித்த காலப்பகுதியில் தான் இறுதிமுடிவை எடுக்கக்கூடும் எனவும் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த பொதுத் தேர்தலின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து வாக்காளர்கள் வாக்களிக்க முன்வந்த போதும் வாக்களிக்க முடியாமல் போன சம்பவங்களும் நடைபெற்றன.

எனவே இந்த முறையாவது மக்கள் வசிக்கும் இடங்களில் விடுத

(6ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதிகள் 11பேர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதி

உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுவந்த இந்திய மீனவர்களில் 11 பேர் நேற்றுடன் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

தம்மை விடுவிக்க கோரியும், தம்மிடமிருந்து சிறிலங்காக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டிருந்த மீன்பிடி ரோலர்களையும் மீள தம்மிடம் ஒப்படைத்து விடுமாறு கோரி 67 இந்திய மீனவர்கள் கடந்த 16ஆம் திகதி சிறைச்சாலையில் உண்ணாவிரதபோராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளமை தெரிந்ததே.

இவர்களில் நேற்று முன்தினம் 05 பேரும், நேற்று 06 பேரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உடல் நிலை மிகவும் மோசமடைந்த நிலையில் உள்ளனரென யாழ். சிறைச் சாலை அத்தியேட்சகர் தெரிவித்துள்ளார். அத்துடன் ஏனையோரின் உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (33)

## த.தே.கூட்டமைப்பையே மக்கள் ஆதரிக்கவேண்டும் வவு.வெகுசன அமைப்புக்கள் ஒன்றியம் கோரிக்கை

வவுனியா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டுமென்றும் வேறு எந்தக் கட்சியை ஆதரிக்கவோ அக்கட்சிகளின் சார்பில் போட்டியிடுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் வவுனியா மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது.

இவ் அமைப்பு இது தொடர்பாக விடுத்த அறிக்கையில்;

கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக நாட்டை மாறிமாறி ஆண்டு வந்த ஆட்சியாளர்களினால் முன்

(6ஆம் பக்கம் பார்க்க)

## திலக்மாரப்பனவுக்கு வழங்கப்பட்டிருந்த மேலதிக பாதுகாப்பு நீக்கம்

### பாதுகாப்பு அச்சுறுத்தல் என அவர் முறையீடு

முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும், தற்போதைய போக்குவரத்து அமைச்சருமான திலக் மாரப்பன தனக்கு வழங்கப்பட்டிருந்த மேலதிக பாதுகாப்பு சனாதிபதியால் நேற்றுடன் பறிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவத்துள்ளார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்; முன்னாள் பிரதிப்பாதுகாப்பமைச்சர் ரத்வத்தைக்கு பாதுகாப்பு அமைச்சுப்பதவி இல்லாமை போன போதும் அவருக்கு ஒன்றரை வருடகாலமாக பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கும் எனக்கூறி அவருக்கு முழுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.அதேபோன்று வெளிவிவகார அமைச்சராக இருந்த காதிர்காமருக்கும் பொ.ஐ.முன்னணி அரசாங்கம் பதவி விலகிய பின்னரும் 20பொலிசார் தொடக்கம் 30பொலிசார் வரை மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில் அவருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்குமெனக்கூறி. இதே வேளை எனக்கு வழங்கிய மேலதிக பாதுகாப்பை சனாதிபதி விலக்கியுள்ளமை தனக்கு பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் செயல் எனக்கூறியுள்ளார். (32)

## சாவகச்சேரி படைமுகாமினுள் சிப்பாய் மர்ம மரணம்

சாவகச்சேரி படை முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் நேற்று முகாமினுள்ளிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் அனுராதபுர பகுதியைச் சேர்ந்தவரெனவும் கடமை நேரத்தில் திடீரென இறந்துள்ளாரென தெரிய வருகிறது. இச் சடலம் இன்று மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பிற்கு கொண்டு செல்லப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 24 மணி நேரத்தில் தென்பகுதியில் தேர்தல் வன்முறைகள் குறித்து முறைப்பாடு

(கொழும்பு)

தென்பகுதியில் 24மணி நேரத்துக்குள் பாராளுமன்ற தேர்தல் தொடர்பில் ஐந்து வன்முறை முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தேர்தலுக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் காமினி நவரெத்தின தெரிவித்துள்ளார்.

மேற்படி வன்முறைகள் பாரதூரமானவை அல்ல எனக் குறிப்பிட்ட அவர் ஏற்கனவே தாக்குதல் வன்முறைகள் தொடர்பில் புத்தளத்தில் பல மாவட்டங்களில் இடம்பெற்றதாகவும் இதிலும் உயிரிழப்பு ஏற்படவில்லை இந்த முறை தேர்தலில் அதிகளவான வன்முறைகள் இடம்பெறலாம் என பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன (32)

## ஈழநாதம் 15ஆம் ஆண்டில் நுழைவு சிறப்புற நடந்தேறிய ஆண்டு நிகழ்வு!

(அலுவலக செய்தியாளர்)

ஈழநாதம் மக்கள் தினசரி15வது அகவையில் காலடி எடுத்துவைக்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் அதன் தலைமைப் பணிமனையில் சிறப்பாக நடைபெற்றது.

செய்தி ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக ஈழநாதம் மக்கள் தினசரியின் முன்னாள் பொறுப்பாளர் மேஜர் அழகனின்பெற்றோரும் மற்றும் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், புலிகளின் குரல்

(6ஆம் பக்கம் பார்க்க)



அரசியற்துறைத் துணைப்பொறுப்பாளர் தங்கன் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைக்கிறார்.

## வரிவிளம்பரம்

### பி. வி. ஆர். நகைமாடம்

1990 ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு மீண்டும் முல்லைத்தீவில் அதே பழைய இடத்தில் 15.02.2004 தொடக்கம் இயங்கி வருகின்றது. என்பதை வாடிக்கையாளர்களுக்கு மன மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். உரிமையாளர் ஆர்.கிருஸ்ண சாமி **(P.V.R.) P.V.R.** நகை மாடம், முதன்மைச்சாலை, முல்லைத்தீவு.

(சி-7162)


## ஆட்டோ, சாரதியை காணவில்லை!

(திருமலை)

திருகோணமலை நகரில் சில தினங்களுக்கு முன்பு காணாமற் போனதாகக் கூறப்படும் ஆட்டோவும் அதன் சாரதியான தேவன் என்பவரும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. இது தொடர்பாக பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (25)

# நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் இவ்வாண்டு 4முதல் 5 வீதமாக குறைவு!

### –உலக வங்கி வதிவிடப் பிரதிநிதி கருத்து

(கொழும்பு)

நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் 2004ஆம்ஆண்டில் 7.0 முதல் 8.0வீதமாக எதிர்பார்க்கப் பட்ட போதிலும் தற்போது அது 4.0முதல் 5.0 வீதமாக குறை வடைந்துள்ளது என்று உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீட்டர் ஹரல்ட் கூறியுள்ளார்.

அதேநேரம் இந்த வீழ்ச்சி 2002இல் மொத்த உள்ளூர் உற் பத்தி இலக்கான 1588பில்லியன் ரூபா என்ற அடிப்படையில், 47.55 பில்லியன் ரூபா இழப்பைக் குறிப்பதாக பொருளாதார விற்பன்னர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

இது ஒவ்வொரு குடும் பத்துக்கும் 10ஆயிரம்ரூபா இழப்பைக் காட்டுவதாகவும் பொருளாதார விற்பன்னர்கள் கவலை வெளியிட்டுள்ளார்கள்.

இதேவேளை உள்ளூர் உற்பத்தியில் ஏற்படும் பாதிப்பு அதனால் குடும்பங்களுக்கான வருமானப் பாதிப்புஆகியவை அடுத்த வருடம் இலங்கையின் பொருளாதாரம் குறைந்த நிலையில் இருந்து ஆரம்பமாவதால் மேலும் குறைநிலையை அடையமுடியும். இது நாட்டின் வளர்ச்சியை மிகவும்மோசமாகப் பாதிக்கும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

அதேநேரம் மூன்று அமைச்சர்களையும் சனாதிபதி பொறுப் பேற்றதுடன் பாராளுமன்றத்தையும் கலைத்தமையே பொருளாதார வளர்ச்சி குறைவடையக் காரணம் என்று உலகவங்கியின் இலங்கைக் கான பிரதிநிதி மேலும் கூறியுள்ளார்.

அத்துடன் இந்த நிலையினால் தான் இலங்கைக்கான 125மில்லியன் அமெரிக்கடொலர் நிதியுதவியை உலகவங்கி இடைநிறுத்தியதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஐ.ம.சு.முன்னணிக்கு சந்திரிகா தலைமையேற்பு அநுரா, மகிந்தவுக்கு தேசிய அமைப்பாளர் பதவி

### நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் முடிவு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது வேட்பு மனுப் பட்டியலில் 90 சதவீதத்தை பூர்த்தி செய்துள்ளதாக அதன் தலைமைச் செயலாளர் சுசில் பிறேம ஜெயந்த தெரிவித்துள்ளார்.

கூட்டணியின் முதலாவது நிறைவேற்றுக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம்சனாதிபதியின் தலைமையின் கீழ் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் கூட்டணியைப் பிரதிநி தித்துவம் செய்யும் கட்சித் தலைவர்கள் மற்றும் பிரதிநிதி கள் ஆகியோர் கலந்து கொண்டனர். எதிர்வரும் தேர்தலுக்காக வேட்புமனு பட்டியலைத் தயார் செய்வதற்கு இதுவரை காணப்பட்ட பிரச்சினைகளுக்கு முழுமையாகத் தீர்வுகாண முடிந்ததெனசுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார். அத்துடன் கூட்டணிக் கான புது அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். கூட்டணியின் தலைவராக சனாதிபதி நியமிக் கப்பட்டுள்ளார். தேசிய அமைப்பாளர்களாக மகிந்த ராஜபக்ஷ, அனுரா ஆகியோர் நியமிக்கப் பட்டுள்ளனர். தினேஸ் குணவர்த்தன, நிமால் சிறிபால டி சில்வா, சரத்அமுனுகம, பேரியல் அஷ்ரப், விஜித ஹேரத் ஆகியோர் உபதலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மோ. சைக்கிளை மோதிவிட்டு தப்பிச் சென்ற வாகனம் காவல்துறையால் துரத்திப் பிடிப்பு!

(அலுவலகசெய்தியாளர்)

ஏ-9 வீதியில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை திருமுறிகண்டி அறிவியல் நகர்ப்பகுதியில் வைத்து மோதிவிட்டு தப்பிச்சென்று கொண்டிருந்த வாகனத்தை தமிழீழ காவல்துறையின் வாகனப்போக்குவரத்துப் பிரிவினர் புளியங்குளத்தில் வைத்து மடக்கிப் பிடித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை5.00 மணியளவில் முகமாலையில் இருந்து வவுனியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த எல்ப்ரகவாகனம் ஒன்று அதன் முன்னால் பயணித்த பிரதான வீதியிலிருந்து அறிவியல் நகர் நோக்கி திரும்ப முற்பட்ட மோட்டார் சைக்கிளை மோதியது. இவ்வாறு மோதிய போது அவ்விடத்தில் மக்கள் திரண்டதையடுத்து பயப்பீதியில் சம்பவ இடத்தை விட்டு சாரதி வாகனத்தைக் கொண்டு தப்பிஓடினார். வாகனம் தப்பி ஓடு வதையும் விபத்துப் பற்றியும் கிளி.காவல் துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த காவல்துறையினர் தப்பிய வாகனத்தை துரத்திச் சென்று புளியங்குளம் பகுதியில் வைத்து மடக்கிப் பிடித்ததுடன் விபத்துப் பற்றிய விசாரணையையும் மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிள் சேதமடைந்ததுடன் அதில் பயணித்த இருவரும் காயமடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (லோ)

# மகப்பேறு, பெண் ஆரோக்கிய பிரச்சினைகளுக்கு ஆலோசனை

யாழ். போதனா மருத்துவமனையில் சேவையாற்றிவரும் மகப்பேற்றியல், பெண் ஆரோக்கிய சிகிச்சை நிபுணர் நவநீதன் அவர்களின் சிகிச்சையும் ஆலோசனையும் நாளை சனிக்கிழமை புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை நடைபெறவுள்ளது.

இதில் மகப்பேறு, பெண் ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு ஆலோசனைகளும், சிகிச்சைகளும் வழங்கப்படவுள்ளதுடன். சத்திர சிகிச்சை அளிக்கப்பட வேண்டியவர்கள் தெரிவுசெய்யப்பட்டுஇலவச சத்திர சிகிச்சையும் வழங்கப்படவுள்ளது. எனவே இதில் பயன்பெறவிரும்புபவர்கள் அனைவரும் முற்கூட்டியே மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவுடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு மருத்துவமனை பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## சாரணர் கலைக்கூறு அவத்தை II பயிற்சி

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் சாரணர் குழுவின் தலைவர்களிற்கான பயிற்சி கிளி/முருகானந்த ம.வி.இல் இன்று பி.ப. 4.00 மணிக்கு ஆரம்பமாகி 23-02-2004 மு.ப. 10.00 மணி வரை (ஐந்து நாட்கள்) நடைபெறும் இதற்கான ஒழுங்குகளை வலயக் கல்விப் பணிப் பாளர் ப. அரியரத்தினமும், மேலதிக உதவி மாவட்ட ஆணையாளர் பொன். தில்லைநாதனும் மேற்கொண்டுள்ளனர். குழுத் தலைவர்கள் அனைவரும் உரிய நேரத்தில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# அக்கராயன் மருத்துவமனையில் 3155 பேருக்குச் சிகிச்சை

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் அரசினர் வைத்தியசாலையில் சென்ற மாதம் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றோர் விபரம் வெளியிட்டுள்ளது. இதில் 3155பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

காய்ச்சல் காரணமாக 461பேரும், மலேரியா 110பேர், வயிற்றோட்டமும் 39 பேர், சுவாசத்தொகுதி சம்பந்த மான நோய் 134பேர், விபத்து காயங்கள் 350பேர், பாம்புக்கடி, நாய்க்கடி என்பனவற்றுக்கு தலா 3பேரும் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர் என அறியமுடிகின்றது. (15)

# புலமைப் பரிசில் பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை, கல்விக்கழகம் மாணவர் அமைப்பு ஆகியவற்றின் ஆதரவுடன் கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நடைமுறைப்படுத்திய பரிசில் திட்டத்தின் அடிப்படையில், 2003ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் கிளிநொச்சி கல்வி வலயத்தில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 2.30 மணிக்கு கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில அரச அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பெற்றோர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் அதிகாரிகள், அமைப்புக்களின் அதிகாரிகள் போன்றவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். மேலும் சித்தியடைந்த சகல மாணவர்களுக்கும் சித்தியடைந்த மாணவர்களின் அடிப்படையில் பாடசாலைகளுக்கும், முதல் மூன்று இடங்களையும் கிளிநொச்சி கல்வி வலயத்தில் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கும் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப் படவுள்ளன. (சோ)


# பணிநிலை வேண்டுகை

ஆயம்,
தமிழீழம்.
18.02.2004

**ஆயப்பகுதியிற் கீழ்க்குறிப்பிடப்படும் பணிநிலைக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்.**

| | |
|---|---|
| **பணிநிலை :-** | **ஆய உதவியாளர் (ஆண்/பெண்)** |
| **தகைமை :-** | **சாதாரணதரப்பரீட்சையிற் குறைந்தது 04பாடங்கள் சித்தியடைந்திருத்தல்.** |
| **சம்பள அளவுத்திட்டம்:-** | **3080-4180+2000 / 10x110** |
| **காலம் :-** | **2004.02.25 காலை 10.00 மணி.** |
| **இடம் :-** | **நடுவப்பணியகம், ஆயப்பகுதி, கிளிநொச்சி.** |
| **குறிப்பு :-** | முன்பு நேரடியாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்களும் சமுகமளிக்கவும். |

# பாராளுமன்ற பொதுத்தேர்தல்–2004

**யாழ்.மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து தற்பொழுது கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கின்ற யாழ். தேர்தல் மாவட்ட தேர்தல் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்கள் தங்களது வாக்குகளை இடம்பெயர்ந்த இடத்திலேயே அளிப்பதற்கான சந்தர்ப்பத்தைக் கொடுப் பதற்குத் தேர்தல் ஆணையாளர் அவர்கள் அறிவித்தல் வழங்கியுள்ளார். இதற்கான விண்ணப்பப் படிவங்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் (கச்சேரியில்) உள்ளது. எனவே இவ்விண்ணப்பங்களைப் பெற்று பூரணப் படுத்தி 2004.02.21 ஆம் திகதிக்கு முன் தேர்தல் ஆணையாளர் அவர் களிற்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுவதாக யாழ்ப்பாண தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.**

**தி.இராசநாயகம்,**
**உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்,**
**யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டமும்,**
**அரசாங்க அதிபர்,**
**கிளிநொச்சி மாவட்டமும்.**

(சி-8795)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் கணபதிப்பிள்ளை செல்லையா

*எமது பாடசாலை ஆசிரியர் திருமதி. கீதாஞ்சலி நேசன் அவர்களின் அன்புப் பேரனாரும் கிளிநொச்சி வலயக் கல்விப்பணிமனை தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு. செ. இரவீந்திரன் அவர்களின் அன்புத் தந்தையாருமாகிய கணபதிப்பிள்ளை செல்லையா அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

**கிளி/கல்மடுநகர் அ.த.க.பாடசாலை,**
**கல்மடுநகர், கிளிநொச்சி.**

(3531)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பா.அ.சங்கத்தினர்.

# ஈராக்கை மக்களிடம் கையளிக்கும் அமெரிக்க அறிக்கை இன்று வெளியாகும்

## –நிர்வாக சபைக்கு அதிக அதிகாரமளிக்க ஐ. நா. விருப்பம்

**அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகளிடமிருந்து ஈராக்கின் அதிகாரத்தை அமெரிக்கா மக்களிடம் ஒப்படைப்பது சம்பந்தமான அமெரிக்காவின் அறிக்கை இன்று வெளியிடப்படும் என்று ஐ.நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் தெரிவித்துள்ளார்.**

ஜூன் மாதம் 30ஆம் திகதியளவில் ஈராக்கின் நிர்வாகத்தின் அதிகாரத்தை கையளிக்கும் வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இதற்கு ஐ.நா.சபையின் சிபாரிசு பெற்றுக் கொள்ளப்படவுள்ளது. ஆயினும் ஈராக்கில் வாழும் ஷியா முஸ்லிம்களினால் பெரிதும் விரும்பப்படுகின்ற தேர்தல்கள் ஏற்கனவே திட்டமிட்டவாறு ஜூன் மாதம்30ஆம் திகதி நடைபெறுவது இயலாத விடயமென ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நிரந்தர அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான தேர்தல்கள் இவ் ஆண்டு இறுதியளவிலோ அல்லது அடுத்த ஆண்டு முற்பகுதியிலோ இடம்பெறலாமென அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதனால் தேர்தல் நடத்துவதற்கு முன்னர் இன்றைய ஈராக்கின் நிர்வாக சபையை விரிவுபடுத்தவும், அதிகளவிலான அதிகாரங்களை அதற்கு வழங்கவும் ஐ.நா.சபை தீர்மானம் செய்துள்ளது.

## 7ஆக உயர்வு

தாய்லாந்தில் பறவைக் காய்ச்சல் நோய் காரணமாக இறந்தவர்களின் எண்ணிக்கை ஏழாக உயர்ந்துள்ளது.அதேநேரம் இந்நோய்த் தொற்றுக்குள்ளானவர்கள் ஒன்பது பேர் இனம் காணப்பட்டுள்ளனர் என்றுதாய்லாந்து சுகாதார அமைச்சு கூறியுள்ளது.



அண்மையில் ஸ்தான்புல் நகரில் நடைபெற்ற பாகிஸ்தான் இந்திய பேச்சுக்களில் கலந்து கொண்டு இந்திய வெளியுறவுஇணைச் செயலர் அருண்குமார் சிங்,இந்தியத் தூதர் சிவசங்கர் மேனன் ஆகியோருடன் உரையாடும் பாகிஸ்தான் வெளியுறவு இணைச் செயலர் றியால் கொக்கர்.

# அமெரிக்க அதிகாரியின் குற்றச்சாட்டால் சவுதி விசனம்

(றியாத்)

சீனாவிடம் இருந்து ஏவுகணைகளைப் பெறுவதற்கும் பாகிஸ்தானிடம் இருந்து அணுவாயுதங்களைப் பெறுவதற்கும் சவுதி அரேபியா முயல்வதாகக் கூறப்படுவதை சவுதி அரசு நிராகரித்துள்ளது.

ஏவுகணைகள் மற்றும் அணுவாயுதங்களைப் பெற சவுதி முயல்வது குறித்து வாஷிங்டன் விசனமடைந்துள்ளதாக அமெரிக்க அதிகாரியொருவர் ரொய்ட்டருக்கு தெரிவித்திருந்தார்.

இந்தச் செய்தியை சவுதி பாதுகாப்பு அமைச்சிலுள்ள பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மறுத்துள்ளதாக சவுதியின் ஊடகப் பிரிவு கூறியுள்ளது.



ஆசிய பசுபிக் பிராந்திய உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளவருகை தந்துள்ள ஸ்பெயின் நாட்டு அரசிசொபியா, பங்களாதேஷின் பாரம்பரிய கதிரை பின்னலில் ஈடுபட்டுள்ள பெண்ணை அவதானிக்கிறார்.

# அல் - ஹைதா அமைப்பினருக்கு எதிராக பாகிஸ்தான் படையினர் நடவடிக்கை

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் படையினர் அல் - ஹைதா அமைப்பினருக்கு எதிரான இராணுவ நடவடிக்கையொன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

இந்த இராணுவ நடவடிக்கை எப்போது இடம்பெறும் என்ற தகவல் வெளியாகாத நிலையில் ஒரு சில வாரங்களில் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எல்லைப்பகுதியைஅண்டிய மலைப் பிரதேசங்களில் அல் - ஹைதா அமைப்பினர் செயற்பட்டுவருவதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

இந் நிலையில் இவர்களைக் கட்டுப்படுத்தும் வகையில் பாகிஸ்தான் படையினர் விரைவில் நடவடிக்கை மேற்கொள்வார்களென ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினரின் தளபதி புதன்கிழமை தெரிவித்தார்.

# அ.தி.மு.க.வுடன் தொகுதிப் பங்கீட்டில் இணக்கம் பா.ஜ.க. 6 மக்களவைத் தொகுதிகளில் போட்டி

(சென்னை)

தமிழ் நாட்டில் 06 மக்களவைத் தொகுதிகளிலும் மற்றும்புதுவைத் தொகுதியிலும் பாரதிய ஜனதாக் கட்சி வரும் மக்களவைத் தேர்தலில் போட்டியிட உள்ளது.

ஐந்தாண்டு இடைவெளிக்குப் பின்னர் பாரதிய ஜனதாவுடன் அ.தி.மு.க. கூட்டணி அமைத்துள்ளது.

அந்தவகையில் வடசென்னை, சிதம்பரம் தனித் தொகுதி, தர்மபுரி, நீலகிரி, கோயம்புத்தூர், நாகர் கோயில் ஆகிய ஆறு மக்களவைத் தொகுதிகளையும் பாண்டிச்சேரியிலுள்ள ஒரேயொரு மக்களவைத் தொகுதியையும் பாரதிய ஜனதாவுக்கு ஒதுக்கியுள்ளது.

இவற்றில் நீலகிரி, கோயம்புத்தூர், நாகர்கோயில் ஆகிய மூன்று தொகுதிகளும் ஏற்கனவே பாரதிய ஜனதா வசமுள்ள தொகுதிகள் ஆகும்.

இதேவேளை பாரதிய ஜனதா கோரிய தென்சென்னைத் தொகுதியையும் புதுக்கோட்டை தொகுதியையும் அ.தி.மு.க. ஒதுக்க மறுத்துவிட்டது குறிப்பிடத்தக்கது.

## இந்திய மக்களவைத் தேர்தல் அட்டவணை நாளை அறிவிப்பு

(புதுடில்லி)

- இந்திய தேர்தல் ஆணையகம் பாராளுமன்ற மக்களவைத் தேர்தலுக்கான அட்டவணையை நாளை அறிவிக்கவுள்ளது.

மாநில அரசு அதிகாரிகளுடன் தேர்தல் ஆணையகம் ஒருவாரம் நடத்திய ஆலோசனைப் பேச்சுக்கள் நேற்று முன்தினத்துடன் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# சூரியன் பூமியிடையே வெள்ளி வரும் அரியகாட்சி!

## ஜூன் மாதம்இடம்பெறுகிறது

பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் வெள்ளிக்கிரகம் வரும் அரிய காட்சி ஒன்று எதிர்வரும் ஜூன் மாதம் எட்டாம் திகதி இடம்பெற இருக்கிறது.

ஆனால் நிலவைப்போல் பூமிக்கு நெருக்கமாக அது இல்லாததால் கிரகணம் போன்று தோன்றாது. அதற்குப் பதிலாக சூரியனுக்கு மத்தியில் ஒரு கரும் புள்ளி போன்றே தோற்றம் அளிக்கும்.

இதனை ஜூன்மாதம் எட்டாம் திகதி காலை 11 மணிமுதல் மாலை 4.30 மணிவரை காண முடியும் என்று வானிலை ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளார்கள்.

# வழக்கிலிருந்து விடுதலையாகும் ம.தி.மு.க.வினர் மனு நிராகரிப்பு

(சென்னை)

பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அண்மையில் பிணையில் விடுதலையாகிய ம.தி.மு.கவின் 08 நிர்வாகிகள் தங்களை இவ் வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டுமென தாக்கல் செய்த மனுவை சென்னை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

வைகோவுடன் இவர்கள் 2002 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பிணையில் வெளிவந்த இவர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதும் மனுவை உயர் நீதிமன்ற நீதிபதி நிராகரித்தார்.

# வடகொரிய நிராகரிப்பு தொடரின் மாற்றுத் திட்டத்திற்கு வழிவகுக்கப்படும்

## அமெரிக்க அதிகாரிகள் எச்சரிக்கை

(வாஷிங்டன்)

அமெரிக்கா மேற்கொண்டு வருகின்ற செயற்றிட்டங்களை தொடர்ந்து வடகொரியா நிராகரித்து வருமாயின் புதியதோர் உடன்பாட்டிற்கு இது வழிவகுக்குமென அரசியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எதிர்வரும் 25ஆம் திகதி பெய்ஜிங்கில் இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தைகள் வெற்றியடையாத வேளை வடகொரியா இவ் உடன்பாட்டை சந்திக்க வேண்டிவரலாமென அவர்கள் மேலும் எச்சரித்துள்ளனர்.

அமெரிக்கா, வடகொரியா, யப்பான், சீனா, ரஷ்யா, தென்கொரியா ஆகிய ஆறு நாடுகள் கூடி நடத்திய முதல் கட்டப்பேச்சு வார்த்தைகள் எந்தவிதமான இணக்கப்பாடும் இன்றி முடிவடைந்தன.

பலமாதங்கள் சென்றபின்பும் அடுத்தகட்ட பேச்சுவார்த்தைகளுக்கான இணக்கப்பாடு இழுபறி நிலையில் இருந்து வந்ததென்பது குறிப்பிடத்தக்கது.



அண்மையில் ஈராக்கில் பொலிஸ் நிலையத்தில்நடைபெற்ற தீவிர வாதிகளின் தாக்குதலில் காயமுற்ற பொலிசார் ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகிறார்.

# இந்திய அதிகாரி–பாக்.அமைச்சர் நேற்று இஸ்லாமாபாத்தில் சந்திப்பு

(கொழும்பு)

இந்திய வெளியுறவுச் செயலாளர், பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குர்சித் முகமத் அர்சூரியை இஸ்லாமாபாத்தில் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையை தொடந்தும் நடத்த இந்தச்சந்திப்பின் போது விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இந்திய வெளியுறவுத்துறை உயர் அதிகாரிகள் கடந்த மூன்று நாட்களாக பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தை காஷ்மீரில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண விரிவான பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஐந்து அம்சச் செயலாளர் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து மத்திய வெளியுறவுச் செயலாளர் சசான் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குர்சித் முகமத் கர்சூரியை நேற்று முன்தினம் இரவு சந்தித்துப் பேசியுள்ளார்.

அப்போது காஷ்மீரில் உள்ள பிரச்சினை தொடர்பாக இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடைபெற விருப்பம் தெரிவித்துள்ளனர்.

# யாழ்.குடாநாட்டில் 63 முகாம்களில் 8,722 தமிழ் மக்கள் அவலவாழ்வு!

## -இராணுவ ஆக்கிரமிப்பு அகலாமையே காரணம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாண மாவட்டத்தில் எட்டு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மொத்தமாகவுள்ள 63 இடம்பெயர்ந்தோர் முகாம்கள் அடிப்படைச் சுகாதார வசதிகள் மிகவும் மோசமான நிலையில் இருந்து வருவதால் அங்கு வாழ்கின்ற 8 ஆயிரத்து 722 பேர் பெரும் சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர்.**

யாழ்.குடாநாட்டில் சிறிலங்கா இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பிலுள்ள பெருமளவு பகுதிகள் இன்னமும் விடுவிக்கப்படாத நிலையில் இப்பகுதிகளைச் சேர்ந்த மக்களே மீள் குடியமர முடியாது முகாம்களில் அவல வாழ்வு வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றி மக்களைச் சொந்த இடங்களில் குடியமர்த்த அரசு உருப்படியான நடவடிக்கைகள் எதனையும் இதுவரை எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், இந்தமுகாம்களில் தங்கியுள்ள 2 ஆயிரத்து 168 குடும்பங்களுக்கும் மொத்தமாகவுள்ள 352 மலசல கூடங்களில் 102 மலசலகூடங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளன.

எனவே தற்போது 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் 250 மலசல கூடங்களையே மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் பாவித்து வருகின்றன.

இதேபோன்று இம்முகாம்களில் இருக்கின்ற 103 குழாய்க் கிணறுகளில் 20 குழாய்க் கிணறுகள் பழுதடைந்து,திருத்தப்படாமல் உள்ளது. இதனை அமைத்துக் கொடுத்த நிறுவனங்கள் அவற்றினைத் திருத்திக் கொடுப்பதற்குத் தம்மிடம் நிதியுதவியில்லையென்று கையை விரித்துள்ளன.

அத்துடன் இம் முகாம்களில் தங்கியிருக்கும் குடும்பங்கள் வாழ்வதற்கென்று அரசாங்கம், அரசசார்பற்ற நிறுவனங்களினால் நிர்மாணிக்கப்பட்ட மொத்தம் ஆயிரத்து 793 இருப்பிடங்களில் இன்று 624 இருப்பிடங்கள் சேதமடைந்துள்ளன. அத்துடன் சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பளை, உடுவில், நல்லூர், கோப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் 67 இருப்பிடங்கள் இன்னமும் நிர்மாணிக்கப்பட வேண்டியதாகவுள்ளது.

மேலும், முகாம்களில் வாழ்கின்ற இம்மக்களுக்கான இதர சுகாதார சேவைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள், தாய்மார்களின் சுகாதார நிலைகளைப் பேணல், குழந்தைகள் நலன் என்பனவும் மோசமான நிலையில் உள்ளதாகத் தெரிய வருகிறது.

## சிரமதானம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பொது மருத்துவமனை வளாகம் மக்களால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது. சிவிக் சென்ரர் கிராம சேவகர் நெறிப்படுத்தலில் இருநூறிற்கு மேற்பட்ட மக்கள் இதில் கலந்துகொண்டதுடன், வைத்தியசாலை ஊழியர்களும் கலந்து கொண்டு சிரமதானப் பணியை மேற்கொண்டனர். (12)

## -வடக்கு-கிழக்கு மாகாணத்தில்-

# 120 பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வு கூடங்கள்

வடக்கு கிழக்கு மாகாணத்தில்120பாடசாலைகள் விஞ்ஞான ஆய்வு கூடங்களை அமைப்பதற்கு மத்திய கல்வியமைச்சு தீர்மானித்துள்ளதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் வடக்கு கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொரு வலயத்தில் இருந்தும் ஐந்து பாடசாலைகள் வீதம் தெரிவு செய்யப்பட்டு விஞ்ஞான ஆய்வுகூடங்கள் அமைக்கப்படுவதுடன் அவற்றுக்கான உபகரணங்களும் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

உலக வங்கியின் உதவியுடன் செயற்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொரு வலயத்தையும் சேர்ந்த 25 பாடசாலைகளுக்கு கணிதபாட உபகரணங்களும், இரு பாடசாலைகளுக்கு விஞ்ஞான உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

# ஒப்பந்தகாரரின் ஆற்றல் விருத்திக்கு நாளை நிகொட் பயிற்சிப் பட்டறை

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு கிழக்கு பகுதிகளிலுள்ள சிறு மற்றும் நடுத்தர அளவிலான ஒப்பந்தகாரர்களின் அறிவாற்றலையும், இயலளவையும் விருத்தி செய்வதற்காகவும் மற்றும் அவர்களுக்கு இருந்துவரும் பிரச்சினைகளைக் கலந்துரையாடி தீர்வினைக் கண்டு கொள்வதற்குமாக நிகொட்டினால் ஒழுங்கு செய்து நடாத்தப்பட்டுவரும் 7 பயிற்சிப்பட்டறைகள் தொடரின் நான்காவது பயிற்சிப் பட்டறை கிளிநொச்சி மாவட்டத்தில் பெப்ரவரி மாதம் 21-23ம் திகதிகளில் சிறான் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த இரு தசாப்தங்களாக எமது வடக்கு கிழக்கு பகுதிகளில் குறிப்பாக வன்னிப்பகுதியில் பாரிய அளவிலான எந்த மீளமைப்பு, அபிவிருத்திப் பணிகளும் இடம் பெற்றிராத காரணத்தினால் இங்கு தேவையான இயலளவைக் கொண்ட ஒப்பந்தகாரர்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது. அதனால் இருக்கின்ற ஒப்பந்தகாரர்களின் இயலளவையும், ஆற்றலையும் அதிகரிப்பதுவும், புதிய ஒப்பந்தகாரர்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதும் அவசியமாகும்.

இப்பயிற்சிப்பட்டறையில் ICTAD, C[illegible]A ஆகியவற்றுடன் கூட்டிணைர[illegible]ரிய அபிவிருத்தி வங்கி, உல[illegible] நிகொட், சமர்ப்பட்ட அரச [illegible] ணர்வு ஸ்தாபனங்களின் பொறியியலாளர்கள், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோர்களும்கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்பயிற்சிப்பட்டறையின் முடிவில் ICTAD, NECORD, CIMA,GTZ ஆகியவற்றின் பணிப்பாளர்கள் கையொப்பமிடும் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்களும் வழங்கப்பட இருக்கின்றது என செய்திக் குறிப்பொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சோ)

# அரசாங்க பாடசாலை விடுமுறை கல்வியமைச்சால் மறு சீரமைப்பு

(கொழும்பு)

பொதுத்தேர்தலை முன்னிட்டு பாடசாலைக்கால அட்டவணைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்தத் தகவலை அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு நேற்று முன்தினம் ஊடக மாநாடொன்றில் அறிவித்தார்.

இதன்படி கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நிலையங்களாக பயன்படுத்தப்படாத பாடசாலைகள் எதிர்வரும் மார்ச் மாதம் 30ஆம் திகதி மூடப்படும். அவை ஏப்ரல் 27ஆம்திகதி இரண்டாம் தவணைக்காக திறக்கப்பட்டு ஆகஸ்ட் 6ஆம் திகதிவரை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

உயர்தர பரீட்சை நிலையங்களாகப் பயன்படுத்தப்படாத பாடசாலைகளின் முதலாம் தவணை எதிர்வரும் மார்ச் 30ஆம் திகதி நிறைவடைகிறது. அவை இரண்டு கட்டங்களாக தமது இரண்டாம் தவணையை ஆரம்பிக்கும். முதலாவது கட்டமாக ஏப்ரல் 19ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை இந்தப் பாடசாலைகள் திறந்திருக்கும்.

இரண்டாம் கட்டமாக யூன் 3ஆம் திகதிமுதல் ஆகஸ்ட் 20ஆம் திகதிவரை பாடசாலைகள் திறக்கப்படும். (32)

# பொ.ஐ.மு. உறுப்பினர் இருவர் ஐ.தே.கட்சியில் இணைவு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்து மேலும் இருவர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ளனர்.

ஸ்ரீ கோதாவில் இவர்கள் இருவரும் தமது அங்கத்துவங்களை செவ்வாய்க்கிழமை பெற்றுக்கொண்டனர்.

வட மத்திய மாகாண சபையின் உறுப்பினரான கே.பி. தென்னகோன் மற்றும் தென் மாகாண சபையின் உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் றிச்சட் பத்திரனவின் பிரத்தியேக செயலாளருமான விஜயபால ஹெட்டியராட்சி ஆகியோரும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டனர். (32)





உ
சிவமயம்

## நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்குக

கரைச்சி
புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய ஆண்டுற்சவ பங்குனி உத்தரப் பொங்கல் [4-04-2004] சம்பந்தமான ஆலோசனைக் கூட்ட அறிவித்தல்

புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய ஆண்டுற்சவப் பொங்கல் விழா (04-04-2004) ஞாயிற்றுக்கிழமை வழமை போன்று நடைபெறவுள்ளது. இப்பொங்கல் விழா சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 20-02-2004 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும் ஆலயக் காப்பாளருமாகிய உயர் திரு தி.இராசநாயகம் அவர்கள் தலைமையில் ஆலய முன்றலில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்குக் கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் காவல்துறைப் பொறுப்பதிகாரிகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதான உறுப்பினர்கள், போக்குவரவுக் கழகப் பொறுப்பாளர்கள் , திணைக்களத் தலைவர்கள், கிராமசேவை அலுவலர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர், பொது முகாமையாளர்கள், செஞ்சிலுவைச் சங்க உத்தியோகத்தர்கள் மற்றும் பலர் கலந்துகொள்ளவிருப்பதால் நாகதம்பிரான் தொண்டர்கள், பக்தர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் கலந்து விழா சிறப்பாக நடைபெற ஆலோசனைகளையும் ஒத்துழைப்புக்களையும் நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

இவ்வண்ணம்
நாகதம்பிரான் ஆலய
பரிபாலன சபையினர்
புளியம்பொக்கனை.

(சி-9094)



## கிளைக்குழு தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுக் கூட்டங்கள்

மேற்படி சங்கத்தின் கிளைப் பொதுச் சபைக் கூட்டமும், கிளைக்குழு தெரிவும், பொதுச் சபைப் பிரதிநிதிகள் தெரிவும் எதிர்வரும் 2004-02-21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு அந்த அந்தப் பகுதிக் கிளைகளில் நடைபெற உள்ளது. எனவே கிளை உறுப்பினர்கள் கீழ்வரும் இடங்களில் மேற்படி திகதியில் சமுகம் கொடுத்துத் தங்கள் கிளைக்குழுவையும் சங்கத்திற்கான பொதுச்சபைப் பிரதிநிதிகளையும் தெரிவுசெய்யுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

| கிளை இல. | கிளையின் பெயர் | கிளைப் பொதுக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| 01 | வித்தியாபுரம் கிளை | மு/கருவேலன்கண்டல் அ.த.க பாடசாலை கருவேலன்கண்டல், |
| 02 | முத்துஐயன்கட்டுகுளம் | மு.ஐ.க.இடதுகரை கிளை நிலையம் |
| 03 | முத்துவிநாயகபுரம் | வலதுகரை மு.ஐ.கட்டு கிளை நிலையம் மு.வி.புரம், |
| 04 | கணேசன் கிளை | கணேசபுரம் கிளை நிலையம் மு.ஐ.கட்டு, |
| 05 | கூழாமுறிப்பு கிளை | கூழாமுறிப்பு கிளை நிலையம், |
| 06 | மன்னாகண்டல் கிளை | மன்னாகண்டல் கிளை நிலையம், |
| 07 | பண்டாரவன்னியன் கிளை | பண்டாரவன்னியன் கிளை நிலையம் கற்சிலைமடு, |
| 08 | பண்டாரவன்னியன் கிளை | பண்டாரவன்னியன் கிளை நிலையம் கற்சிலைமடு, |

செயலாளர்,
மு.ஐ.கட்டு பல நோ.கூ.சங்கம்,
ஒட்டுசுட்டான்.

(சி-7156)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 □ 12 □ 1919



உதிர்வு 01 □ 02 □ 2003

அமரர்

## திரு.ஐயம்பிள்ளை கந்தையா

திதி:- 20-02-2004

பகரும் வித்தைதனைப் பக்குவமாய்ப் பயின்று
சிகரமெனச் சீரான வழிகாட்டி
நகரும் இவ்வுலகில் நலம் கண்டு மனமகிழ்ந்து
பாரில் திளைத்து வாழ்ந்து பரமனடி இணைந்த ஐயாவே
நீரணிந்தான் கழலினிலே நீடித்து இன்புறவே முப்போதும்
எப்போதும் உங்களுக்காய் பிரார்த்திப்போம்.

தகவல்:-
மகன் கணபதிப்பிள்ளை,
இல 188/2 திருவையாறு,
கிளிநொச்சி

உங்கள்
ஆத்மாசாந்திக்காய்ப் பிரார்த்திக்கும்:-
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(4251)

சிந்தனைக்கு



இலட்சியத்தால் ஒன்றுபட்டு உறுதிபூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 20 -02-2004

## கொள்கையின் கீழ் இணைவு!

நான்கு கட்சிகளைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விடுதலைப்புலிகளுடன் கொள்கை ரீதியில் உடன்பட்டு எதிர்வரும் பொதுத் தேர்தலை எதிர்கொள்ள முன்வந்துள்ளமை பாராட்டத்தக்கதொரு விடயமாகும். ஏனெனில், இன்று தமிழ் மக்களின் கரிசனையும் இதுவாகவே உள்ளது. அத்தோடு, சர்வதேச சமூகத்திற்கு இதன் மூலம் தெளிவுபடுத்தப்பட வேண்டிய விடயங்களும் உள்ளன.

இதனை நேற்று முன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேச்சு நடத்தியதன் பின்னர் செய்தியாளரிடம் பேசிய அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களும் பிரதிபலித்தார். அவர் "தமிழ் மக்கள் எந்த இலட்சியத்திற்காக எந்தக்கொள்கைக்காக ஒன்றுபட்டு ஒரு தலைமைத்துவத்தின் கீழ் நிற்கின்றார்களோ அதனை இம்முறை தமிழ் மக்கள் சர்வதேச சமூகத்திற்கு நிலை நிறுத்துவதற்கான ஆயத்த ஏற்பாடுகளுடன் இருக்கின்றமையால், அதன் அடிப்படையில் நாங்களும் தேசிய கூட்டமைப்பும் ஒன்றிணைந்திருக்கின்றோம்'' எனத் தெரிவித்துள்ளார்.

1977ஆம் ஆண்டு தமிழ் மக்கள் எவ்வாறு கொள்கைக்காக வாக்களித்தார்களோ அதேபோன்றதொரு சந்தர்ப்பம் - அதாவது கொள்கைக்காக வாக்களிக்க வேண்டிய சந்தர்ப்பம்/காலம் தற்பொழுது மீண்டும் ஏற்பட்டுள்ளது எனின் மிகையாகாது.

இன்றைய அரசியல் சூழ்நிலையில், தமிழ் மக்களின் குரல்கள் ஓங்கி ஒலிக்க வேண்டிய அவசியம் இருக்கவே செய்கின்றது. ஏனெனில், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் ஒரு எல்லையைத் தொட்டு நிற்கின்றது. சர்வதேச சமூகமும் தமிழ் மக்களின் செயற்பாடுகளை உன்னிப்பாக அவதானித்து நிற்கின்றன.

அதேவேளை, தமிழ் மக்கள் தமது அபிலாசைகளை, உணர்வுகளைச் சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தும் ஆவலையும் கொண்டுள்ளனர். இந்நிலையில், தமிழ்க் கூட்டமைப்பினர் தமக்குள் உள்ள கருத்து வேறுபாடுகளை மறந்து ஒரு கொள்கையின் கீழ் தேர்தலை எதிர்கொள்ளவும் விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தின் கொள்கைகளுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளமையும் ஒரு பொறுப்புணர்ந்த செயற்பாடாகும்.

ஆயினும், வேறு சில சக்திகள் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மாறாகச் செயற்பட முற்பட்டு நிற்கின்றன. ஆனால், தமிழரின் வரலாற்றில் இது புதியதொன்றல்ல. வரலாற்றுக் காலத்தில் இருந்தே பல தீய சக்திகள் தம தினத்தைக் காட்டிக் கொடுக்க முற்பட்டிருந்தனர் என்பது வெளிப்படையானது. ஆகையினால், தற்பொழுதுதான் இத்தகைய சக்திகள் உருவாகியிருப்பதாகக் கொள்வதற்கில்லை.

இதேவேளை, இத்தகைய காட்டிக் கொடுக்கும் சக்திகளை தமிழ் மக்கள் எப்பொழுதும் மன்னித்ததும் கிடையாது. ஆகையினால், இவர்கள் குறித்தும் பெரும் கவலை கொள்ள வேண்டியது இல்லை. ஆயினும், இச்சக்திகள் இன்று பேரினவாத மற்றும் சிங்கள அதிகாரவர்க்கத்தினால் மட்டுமல்ல, அதற்கு அப்பால் உள்ள சில சக்திகளினாலும் கையாளப்படக் கூடிய சந்தர்ப்பங்கள் / வாய்ப்புக்கள் உண்டு.

குறிப்பாக இன்று, இலங்கை இனப்பிரச்சினையானது, சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ள நிலையில் இவ்விவகாரமானது இலங்கைக்குள் மட்டுப்படுத்தப்பட்ட விவகாரமாகவில்லாது சர்வதேச ரீதியிலான விவகாரமாகவும் மாற்றம் கண்டுள்ளது. இந்நிலையில் இவ்விவகாரத்தை சர்வதேச நாடுகள் தமது அனுகூலங்களுக்கு ஏற்ப கையாள முற்படுதல் இயற்கையே.

இந்நிலையில், இத்தேர்தலின் மூலம், தமிழ் மக்களின் உணர்வுகள் எவ்வாறு பிரதிபலிக்கப்படுகின்றன என்பதனை அவதானிக்க முற்படும் அதேவேளை, தமது நோக்கங்களுக்கு ஏற்ற வகையில் தேர்தலின் போக்கை திசை திருப்ப சில சக்திகள் முற்படுதலும் கூடும். அதிலும் குறிப்பாக, தமிழ் மக்களின் உணர்வுகள் ஏகோபித்த வகையில், ஒரே குரலில் ஒலிக்கப்படுவதை விரும்பாத / தமிழரின் உணர்வுகளுக்கு மாறான வெளி சக்திகளும்கூட இருப்பதற்கு வாய்ப்புண்டு.

ஆகையினால், தமிழ் மக்கள் எந்த இலட்சியத்திற்காக, எந்தக் கொள்கைக்காக ஒரே தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றுபட்டு போரிட்டார்களோ அதே இலட்சியத்திற்காகவும், கொள்கைக்காகவும் இத்தேர்தலைப் பயன்படுத்திக் கொள்ளுதல் அவசியம். அத்தோடு, தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் எந்த சக்திகளும் / கட்சிகளும் இக்கொள்கையின் கீழ் அணி திரளுதல் அவசியம். அதுவே தமிழ் மக்களின் உணர்வுகளைச் சர்வதேச ரீதியில் ஒருமித்த குரலில் பிரதிபலிக்கத்தக்கது.

## -பொதுத் தேர்தல் காலத்தில்-
# அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவினர் சிவில் உடையில் பணியாற்றத் தடை!

தேர்தல் காலத்தில் அரசாங்க அமைச்சர்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் அமைச்சர் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள் சிவில் உடையில் கடமையாற்ற அனுமதிக்க வேண்டாமென பொலிஸ்மா அதிபர் அமைச்சுக்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பான பொறுப்பு அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளார்.

சனாதிபதி பிரதமர் ஆகியோரது பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரிகளுக்கு இந்த உத்தரவு ஏற்புடையது அல்ல என்று பொலிஸ்மா அதிபர் இந்திர டிசில்வா கூறியுள்ளார்.

கடந்த தேர்தலின் போது பாதுகாப்பு பிரிவைச்சேர்ந்த சில பொலிஸ் அதிகாரிகள் சிவில் உடையில் கடமைகளில், ஈடுபட்டிருந்த போது சட்டவிரோதச் செயல்களைப் புரிந்துள்ளதால் பொலிஸ் திணைக்களம் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, தேர்தல் நடைபெறும் காலத்தினுள் வன்முறைகள் அதிகமாக நடைபெறும் என கண்காணிக்கும் பிரதேசங்களுக்கு மேலதிக பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# பொதுத்தேர்தல் வன்செயல்கள் அதிகமாக இடம் பெறலாம்
## -ரவூப் ஹக்கீம் ஆருடம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலின் போது வன்செயல்கள் அதிகமாக நடப்பதற்கான அறிகுறிகள் தென்படுவதாகவும், அதனால் வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்களை கூடுதலாக அனுப்பி வைக்குமாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் ஐரோப்பிய ஒன்றியம் பொதுநலவாய அமைப்பு ஆகியவற்றிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொதுவாக வடக்கு கிழக்கில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் தேர்தலின் போது வாக்கு மோசடிகளும் ஏனைய தேர்தல் வன்செயல்களும் அதிகரிக்கும் சாத்தியம் கூடுதலாகக் காணப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

# ஹெல உறுமய கட்சியின் சார்பில் ஐந்து பௌத்தபிக்குகள் போட்டி!

(கொழும்பு)

தேசிய ஹெல உறுமய கட்சியிலிருந்து ஐந்து பௌத்த பிக்குகள் இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிடத் தயாராகியுள்ளதாக பிக்குகளின் சம்மேளனத்தின் தலைவர் எல்லாவல மேதானந்த பிக்கு தெரிவித்துள்ளார்.

அதன்படி எல்லாவல மேதானந்த, ஓமல்பே சோபித அத்துரலியே ரதன, கொலன்னாவே சூரிய மங்கள, உடுவே தம்மாலோக ஆகிய பிக்குகள் தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.

சிங்களம் எனப்படும் சிறிலங்காவில் தற்போது மோதல்நிலை தோன்றியுள்ளதாகவும் விடுதலைப் புலிகள் நாட்டைப்பிரிக்க சட்டபூர்வமாக அனுமதித்துள்ளதாகவும் கிறிஸ்தவ மதத்தின் ஆக்கிரமிப்பினால் பௌத்த மதம்அழிக்கப்படுவதாகவும் தெரிவித்ததுடன் அதனைத் தடுக்கும் வகையிலேயே தேர்தலில் போட்டியிடுவதாகவும் மேற்படி பிக்குகள் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளனர்.

# தேர்தல் கண்காணிப்பாளரின் பாதுகாப்புக்கு சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் உறுதி

(கொழும்பு)

பொதுத் தேர்தல் வாக்களிப்பின் போது கண்காணிப்பு பணியில் ஈடுபடும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுமென பொலிஸ்மா அதிபர் உறுதி வழங்கியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் செவ்வாய்க்கிழமை பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவை சந்தித்து தமது பாதுகாப்பு குறித்து கலந்துரையாடிார். பொலிஸ்மா அதிபரின் உறுதிமொழியை அடுத்து அவசியமான கண்காணிப்பாளர்களை தேர்தல் பணிகளில் ஈடுபடுத்த ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் முடிவெடுத்துள்ளனர்.

அண்மையில் நாட்டில் இடம் பெற்ற வன்முறைகள் தொடர்பில் கருத்துரைத்த பொலிஸ்மா அதிபர் அவை பாரதூரமானவை அல்ல என சுட்டிக்காட்டினார்.

இதேவேளை ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்சவையும் சந்தித்து உரையாடினர் (32)

# 6 வருடங்களில் 5 தேர்தல்கள் 4,500 கோடி ரூபாய் செலவீடு

(கொழும்பு)

இலங்கையில் கடந்த ஆறு வருட காலத்தில் ஐந்து தேர்தல்கள் நடத்தப்பட்டிருப்பதையும் அதற்கு 4,500 கோடி ரூபா செலவிடப்பட்டதாகவும் பொருளியல் நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

இந்த 4,500 கோடி ரூபாவும் தேர்தலுக்காக நாட்டிற்கு ஏற்பட்ட பொருளாதாரச் செலவு என்பதுடன் இத்தொகை 10 வருடங்களுக்கு முன்னர் வரவு - செலவுத் திட்டத்தில் துண்டுவிழும்தொகைக்குச் சமனாகும்.

மேலும் இத்தொகை 2002 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகையிலும் (3,200கோடி) சுகாதார அமைச்சிற்காக ஒதுக்கப்பட்ட தொகையிலும் (2,500கோடி) அதிகமாகும் எனவும் பொருளியல் வல்லுனர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

# பதவிநீக்கப்பட்ட அமைச்சர்களின் பாதுகாப்பைக் குறைக்க ஏற்பாடு!
## -சனாதிபதி பொலிஸ்மா அதிபருக்கு பணிப்பு

பதவி நீக்கப்பட்ட அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை குறைக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 9ஆம் திகதி இவர்கள் பதவி நீக்கப்பட்டபோதும் இவர்களில் பலர் இன்னமும் உத்தியோக பூர்வ வாகனங்களைப் பயன்படுத்துகிறனர். அதிகளவு பாதுகாப்பு ஊழியர்களை இவர்கள் கொண்டிருப்பதால் அவர்களைப் பயன்படுத்தி எதிரணியினரைத் தாக்கக்கூடும் எனவே நிர்ணயிக்கப்பட்ட அளவு பாதுகாப்பு உத்தியோகத்தர்களை மட்டும் வழங்க வேண்டும் என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொலிஸ்மா அதிபருக்கு பணித்துள்ளார். (32)

# தொண்டர்ஆசிரியரைநியமிக்க கல்விப்பணிப்பாளருக்கு அதிகாரமில்லை
## - மாகாணக் கல்வி அமைச்சு அறிவிப்பு

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாணப் பிரதேச வலயக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியோருக்கு தொண்டர் ஆசிரியர்களை நியமனம் செய்யும் அதிகாரம் வழங்கப்படவில்லை என்று மாகாணக்கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

2000/03 ஆம் இலக்க சுற்று நிருபத்திற்கு அமைவாக வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள எந்தவொரு அரசாங்கப்பாடசாலைகளிலும் தொண்டர் அடிப்படையில் ஆசிரியர்கள் எவரையும் நியமனம் செய்ய வேண்டாம் என்றும் மாகாணக்கல்வியமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

மாகாணத்தின் ஏதாவது ஒரு பாடசாலையில் குறித்த ஒரு பாடத்தை அல்லது பாடங்களை கற்பிப்பதற்குப் பொருத்தமான ஆசிரியர் இல்லாதவிடத்து குறித்த பாடத்தில் தேர்ச்சியுள்ள ஒருவர் தொண்டர் அடிப்படையில் சேவையாற்றச் சம்மதிக்கும் பட்சத்தில் குறித்த அதற்கான விண்ணப்பம், வலயக்கல்விப் பணிப்பாளர் ஊடாக அதிபரினால் மாகாணக்கல்வியமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.




ஈழநாதம் நாளேட்டின் 15ஆம் ஆண்டு நுழைவுநாள் நிகழ்வில் மேஜர் அழகனின் திருவுருவப்படத்திற்கு அவரது தாயார் மலர்மாலை அணிவிப்பதையும் காவல்துறைப்பொறுப்பாளர் பா.நடேசன் அவர்கள் ஊழியர்களுக்கு பரிசில்கள் வழங்கிக்கௌரவிப்பதையும், கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் அவர்கள் உரை நிகழ்த்துவதையும் மேலுள்ள படங்களில் காணலாம்.

# இளையோரின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு இளையோர் செயற்பாட்டு நிறுவனம் இயங்கும்

## - திறப்புவிழா நிகழ்வில் பாப்பா தெரிவிப்பு

(அலுவலகசெய்தியாளர்)

"யுத்தத்தின் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்த இளையோரின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு அவர்களின் உடல்,உள,மன எழுச்சிக் கோலங்களை மேம்படுத்தும் இலக்கில் உருவாக்கப்பெற்ற இளையோர் செயற்பாட்டு நிறுவனம் சுயாதீனமாக தனது பணிகளை ஆற்றும். இது விளையாட்டில் மட்டுமல்ல இளைஞர்களின் தொழிற்திறன் என்பனவற்றை மேம்படுத்தும் இலக்கில் தனது செயற்பாடுகளை, வடகிழக்கின் எட்டு மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கும்"

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா.

நேற்று பிற்பகல் 4.00 மணிக்கு கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பெற்ற இளைஞர் செயற்பாட்டு நிறுவனத்தின் தலைமைப் பணிமனை திறப்புவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தலைவர் ம.பத்பநாதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பொதுச்சுடரினை வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத் துறை உதவிப் பணிப்பாளர் கே.டபிள்யு விமலராஜன், தமிழீழ அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் ஏற்றி வைக்க தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ அரசியல் துறை



துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார்.

அக வணக்கத்தைத் தொடர்ந்து மேற்படி நிறுவன கட்டடத்தினை கிளி அரச அதிபர் தி.இராசநாயகம் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந் வைத்தார்.

இந்நிறுவனத்தின் செயலாளராக அன்ரன் அன்பழகனும், பொருளாளராக ஜோயல் பியசீலனும் தெரிவாகியுள்ளதுடன் இவர்களுடன் மேலும் நான்கு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப் பெற்றுள்ளனர். (சோ)

# கிளி.மாவட்ட வாக்காளருக்கு வாக்களிப்பு நிலையமமைக்க நடவடிக்கை

## - இடம் தீர்மானிக்கப்படவில்லை

பொதுத்தேர்தலில் கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்கள் வாக்களிக்கக்கூடியவகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இப் பகுதிகளிலுள்ள வாக்கெடுப்பு நிலையங்களில் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் திணைக்களத்தின் யாழ் அலுவலகம் பணிகளை மேற்கொண்டுவருகின்றது.

ஆயினும் இவ் வாக்கெடுப்பு நிலையங்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியிலா? அல்லது வெளியேயா அமைப்பது என்பது பற்றி அரசே அறிவிக்கவேண்டுமென தேர்தல் திணைக்கள உதவி தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளார்.

# வன்னி தேர்தல் மாவட்டத்திற்கு கூட்டமைப்பு வேட்பாளர் பட்டியல் நாளை வெளியிடப்படும்

வன்னி தேர்தல் மாவட்டத்திற்கான தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியல் நாளை வெளியிடப்படுமென தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக இன்று முடிவெடுக்கப்படுமெனவும் அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (10)

# வவுனியாவில் நேற்று வேட்பு மனுத்தாக்கல்

வவுனியாவில் நேற்று அரசியல் கட்சி ஒன்றும் சுயேட்சைக் குழுவொன்றும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

இலங்கை பூமி புத்திரகட்சி மற்றும் முஸ்லிம் சமூகம் சார்பில் ஒரு சுயேட்சைக் குழுவும் வன்னி உதவி தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

# புலிகளை அரசியல் நீரோட்டத்திற்கு அழைத்து வருவதே தனது நோக்கமாம்

## சந்திரிகா அம்மையார் கூறுகிறார்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளை அரசியல் நீரோட்டத்திற்குள் அழைத்து வந்து வன்முறையில் இருந்து ஒதுக்கிக் கொள்வதே எமது நோக்கமாகும்.

அதேபோல் விடுதலைப்புலிகளை அரசாங்கத்தில் இடம்பெறச் செய்யவும், அதிகாரப் பரவலாக்கல், மாகாண சபை அல்லது வேறு எந்த வடிவிலான நிர்வாக முறைக்கும் அவர்களை உட்படுத்துவதும் எமது நோக்கமாக உள்ளதென சனாதிபதி சந்திரிகா தெரிவத்துள்ளார்.

இதேவேளை, அரசியல் யாப்பில் திருத்தங்களை மேற்கொள்வதோடு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறைமையும் இரத்துச் செய்ய வேண்டும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஹம் காவில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஹம்பகா மக்களைக் கௌரவிக்கும் விழாவில் வைத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விழா சனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெற்றது. சனாதிபதி மேலும் தெரிவிக்கையில், தேவைக்கு அதிகமான அதிகாரங்கள் இருக்கும் நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி முறையை இரத்துச் செய்து இந்தத் தேர்தல் முறையை மாற்றி வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண விடுதலைபபுலிகளுடன் கலந்துரையாடுவதற்கும், இந்தப் பிரச்சினையுடன் தொடர்புடைய சகல தரப்பினருடனும் கலந்துரையாடி தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கும் அரசியல் யாப்பில் மாற்றங்களை ஏற்படுத்த எமக்கு உங்கள் ஆணை தேவை. பதின்மூன்று தடவைகள் தேர்தலை வைக்காதிருந்திருக்க முடியும்.

இதற்கு ஜே.ஆரின் அரசியல் யாப்பில் முழுமையான அதிகாரங்கள் இருக்கின்றன. அதேபோன்று அனைத்து அமைச்சுக்களையும் பொறுப்பேற்கவும் முடியும். அது சட்ட விரோத நடவடிக்கை அல்ல.

இந்த அரசாங்கத்தை எனக்குத் தேவையான முறையில் கொண்டு செல்ல முடியும்.

நாட்டின் தற்போதைய அரசியலில் மக்கள் மத்தியில் விரக்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும் சனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

நீங்கள் விரக்தியுடன் அனைத்து அரசியல் வாதிகள் குறித்தும் அவதானித்துக் கொண்டிருக்கிறீர்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் எமக்கு உங்கள் ஆணையை வழங்கத் தயாராக இருப்பது தெரிகிறது.

எனினும், தவறிழைத்தால் மன்னிக்கமாட்டீர்கள் என்பதும் தெரிகிறது. நான் அதிகம் நல்லவர் என நீங்கள் கூறினீர்கள் இம்முறை அதிகம் நல்லவராக இருக்க மாட்டேன் சகோதரர்களே.

சத்தியத்திற்கு தலைசாய்த்து தவறிழைத்தால் கடுமையாக நடந்து கொள்வேன் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன் என்றார்.

புலிகள் கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் தமது பலத்தை அதிகரித்துக் கொண்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

### ஈழநாதம்..

வானொலிப்பொறுப்பாளர் தமிழன்பன், விடுதலைப் புலிகளின் வெளிநாட்டு தொடர்பகத்தைச் சேர்ந்த கலாநிதி சோமஸ்கந்தன் மற்றும் துறைசார் பொறுப்பாளர்கள், எழுத்தாளர்கள், விளம்பரதாரார்கள் என பலர் கலந்துகொண்டனர்.

முன்னதாக பொதுச் சுடரினை தமிழீழ கல்விக்கழகப் போறுப்பாளர் வெ.இளங்குமரன் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார்.

மண்டபத்தில் வைக்கப்பெற்றிருந்த மேஜர் அழகனின் திருவுருவப்படத்திற்கு மேஜர் அழகனின் தாய் தந்தையர் ஈகச்சுடரேற்றி மலர்மாலைஅணிவித்தனர்.

தொடர்ந்து வரவேற்புரையினை வெள்ளிநாதம் சிரேஷ்ட உதவி ஆசிரியர் சிறிஇந்திரகுமார் நிகழ்த்தினார்.

தலைமையுரையினையடுத்து உரையினை ஈழநாதம் மக்கள் தினசரி பிரதம ஆசிரியர் தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர், தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் ஆகியோர் வழங்கினர்.

அடுத்து பணியாளர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றன.

அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழக் காவலதுறைப்பொறுப்பாளர் பா.நடேசன், அனைத்துலக தொடர்பகத்தைச் சேர்ந்த கலாநிதி சோமஸ்கந்தன், புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் ஈழநாடு பத்திரிகை நிர்வாகப் பணிப்பாளர் சிவமகாராஜா மேஜர் அழகனின் தாயார் ஆகியோர் பரிசில்களை வழங்கிப் பணியாளர்களைக் கௌரவித்தனர்.

நன்றியுரையினை சிரேஷ்ட உதவி ஆசிரியர் செல்மன் வழங்கினார். (சோ)

### த.தே...

னெடுக்கப்பட்ட கோரயுத்தத்தினால் தமிழ் மக்கள் தமது இருப்பிடங்களை இழந்து பெறுமதிமிக்க சொத்துக்களை இழந்து அகதிகளாக ஆதரவற்ற நிலையில் இடப்பெயர்வுகளுக்கும், உயிரிழப்புக்களுக்கும் உள்ளாக்கப்பட்ட இந் நிலையில் யுத்த முறையில் புலிகளின் வெற்றிகளிலும் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வெற்றியும் ஆட்சியாளர்கள் சமாதான முன்னெடுப்புக்களை ஆரம்பித்து புரிந்துணர்வு உடன் படிக்கை ஏற்படுத்தப்பட்டு சர்வதேச சமூகங்களின் மூலம் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இவ்வேளை தமிழ் மக்களின் சார்பாக தீர்வு திட்டயோசனைகளும் கையளிக்கப்பட்டு நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட வாய்ப்புக்கள் கிட்டியவேளை அதனைத் தாங்கிக்கொள்ள இயலாத இனவாத சக்திகளினால் இன்று நாமும், நாட்டு மக்களும் பல சோதனைக்கு உள்ளாகியுள்ள இதேவேளை தமிழ் மக்களாகிய நாம் எதிர்வரும் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் வாழும் அனைத்து பிரதேசத்திலும் தமிழ்த் தேசிய கூட்டத்தில் கலந்து கொள்கின்றது.தமிழ் மக்களுக்கு எதிரான வேறு கட்சிகளிலும் சில தமிழ் வேட்பாளர்கள் நியமிக்கவுள்ளமை தமிழ் மக்களிடையே பெரும் வேதனைக்குரிய விடயமாக கருதப்படுகிறது. எனவே தமிழ் மக்கள் வேறு எந்த கட்சிகளையும் ஆதரிக்கவோ வேறு கட்சிகளில் வேட்பாளராக நிற்பதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதாக வவுனியா மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது; தமிழ் மக்கள் அனைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு வாக்களிப்பதன் மூலம் அதிக பெரும்பான்மையான தமிழ் பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்வதன் ஊடாக இலங்கை அரசிற்கு மட்டுமல்ல சர்வதேச சமூகத்திற்கும் எமது பலத்தை எடுத்துக்காட்ட முடியும் என வேண்டுகோள் விடுத்துள்ளது. (10)

### வடக்கு...

லைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள்ளே வாக்குச்சாவடிகளை வைக்குமாறு அழுத்தங்கள் தொடர்ந்து வலுப்பெற்று வருகின்றன. இம் முறையாவது அதற்கு வாய்ப்பளிக்கப்படுமா எனப் பத்திரிகையாளர்கள் கேட்டபோது,

கடந்த முறைபோலன்றி இம் முறை படைத் தளபதிகள் சரியாக நடந்து கொள்வார்கள் என்று தான் எதிர்பார்ப்பதாகவும்,

ஆனால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் நாட்டின் ஏனைய பிரதேசத்திற்கும் இடையிலான நிலைப்பாட்டில் மாற்றங்கள் இருக்கின்றன. ஆகவே தேர்தலை அண்மித்த காலத்தில்தான் அதற்கான முடிவொன்றை எடுப்பேன் எனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஒன்றும் செய்யமுடியாத கட்டத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தான் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அங்கு தான் வாக்குச்சாவடிகளை நிறு[illegible] வேண்டும் என்றும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் இராணுவ காவலரண்களை அண்டிய பகுதியில் அதாவது சூனியப் பிரதேசத்தில் வைக்கப்படும் இதனால் வாக்களிப்போரின் தொகையை அதிகரிக்கலாம் என்றும் தேர்தல் ஆணையாளர் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.